மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.
முன்னிலை: திரு. நா. வெங்கடேசன்,D.C.,B.A.,M.L,PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2022–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ம் நாள் திங்கள் கிழமை
**I.A.No. 45/2022**
**in**
**O.S. No. 29/2021**

பேச்சியம்மாள் ... மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி

/எதிர்/

பூமயில் ...எதிர்மனுதாரர்/மனுதார்/வாதி

இந்த இடைநிலை மனு என் முன்பாக 21.11.2022 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் யாரும் முன்னிலையாகததால், மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பிலான வாதத்தை முடித்தும், எதிர்மனுதாரர்/மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. J.உதுமான் அவர்கள் ஆஜராகியும், எதிர்வாதங்களையும் கேட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1) மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 04.03.2022ம் தேதியன்று I.A.No.107/2021ல் தனக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள exparte உத்தரவினை Set aside செய்து உத்தரவிட கோரி சி.பி.சி.ஆர்டர் 9 ரூல் 7–ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன் என்றும் மேற்படி அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவேன் என்றும் பிரதான இடைக்கால மனு I.A.No.107/2021ல் எதிர்மனுதாரர் ஆவேன் என்றும் இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி பூமயில் தன் தாயார் ஆவார் என்றும் அவர் தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கில் தான் தன் பக்கம் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் இந்த

21/11/2022

எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி பூமயில் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரமும், அதை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், மற்றும் தன் பெயருக்கு தன் தாயார் எழுதிய இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரமும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்நிலையில் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்திருந்த இடைக்கால மனு I.A.No.107/2021 ல் தன் பக்கம் Enquiry க்காக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும் தான் தூத்துக்குடியில் வசித்து வருவதால் வழக்கின் நிலை குறித்து தனது முந்தைய வழக்கறிஞரிடம் கேட்டும் சரியான தகவல் தனக்கு கிடைக்கப்பெறாததால் தனக்கு எதிராக Exparte உத்தரவு கடந்த 04.03.2022 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தனக்கு எதிரான Exparte உத்தரவை தனது தற்போதைய வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் என்றும் இடைக்கால மனு I.A.No.107/2021 ல் தான் தன் பக்கம் Enquiry க்கு தயாராக உள்ளேன் என்றும் தனக்கு எதிராக ஏற்பட்டிருக்கும் Exparte உத்தரவு Set Aside செய்யப்பட வேண்டியதாகும் என்றும் தன்னுடைய வருகையின்மை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் தெய்வாதீனமாய் ஏற்பட்ட தவறாகும் என்றும் எனவே இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் தங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் எனவே கனம் நீதிபதி அவர்கள் கிருபை செய்து மேற்சொல்லிய காரணங்களினால் மேற்படி இடைக்கால மனு I.A.No.107/2021 ல் 04.03.2022 ல் தனக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள exparte உத்தரவினை set aside செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியால் இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:-

தான் இந்த நிர் எதிர்மனுதாரர் ஆவேன் என்றும் அசல் மனுவில் மனுதார்/வாதி ஆவேன் என்றும் மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தையும் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபணை செய்கிறேன் என்றும் மனுதாரர் மனுவானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதில்லை என்றும் மனுதார் மனுவானது ஆவணங்கள் படியும், சங்கதிகள் படியும் உண்மையில்லை என்றும் மனுதார் பொய்யான

21/x1/2022

விபரங்கள் கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதார் மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் அவிடவிட்டு பாரா 4ல் கண்ட விபரங்கள் அனைத்தையும் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபணை செய்கிறேன் என்றும் மனுதார் தூத்துக்குடியில் மட்டுமே இருந்து வருகிறார் என்ற விபரம் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் தாவா சொத்தை வேறு நபர்களுக்கு கிரையம் கொடுக்க முயலும் மனுதார் வாரத்திற்கு இருமுறை சாயல்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து தாவாச் சொத்தைப் பொறுத்து மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார் என்றும் இது சம்மந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து தனக்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பப்பட்டு அந்தக் கடிதமும் அசல் மனுவில் ம.சா.6 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது மேற்படி விபரங்களை எல்லாம் மறைத்து ஏதோ மனுதார் தூத்துக்குடியில் இருப்பது போலவும், அவரது வழக்கறிஞரிடம் சரியான தகவல் மனுதாருக்கு கிடைக்கவில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக விபரங்களை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைக்கத்தக்கதில்லை என்றும் மனுதாரர் மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மேலும் மனுதார் அசல் மனுவில் கடந்த 25.03.2022ம் தேதி அன்று ஒரு தலைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் இந்நிலையில் மனுதார் கடந்த 04.03.2022ம் தேதி அன்று அசல் மனுவில் ஒரு தலைப்படுத்தப்பட்டுள்ளது போல போலியான விபரங்களை கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும் அவிடவிட்டில் பாரா5ல் கண்ட விபரங்கள் அனைத்தையும் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபனை செய்கிறேன் என்றும் மனுதார் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்ட விபரம் மனுதாருடைய தற்போதைய வழக்குரைஞர் மூலம் மனுதார் தெரிந்து கொண்டார் என்பதை மனுதாரரே நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்றும் மேலும் ஏற்கனவே அசல் மனுவில் மனுதார் தரப்பு விசாரணைக்காக சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 15.03.2022, 18.03.2022, 25.03.2022 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டு மேற்படி வாய்தாக்களில் மனுதார் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு விசாரண்கு ஒத்துழைக்காததாலேயே சமூகம் நீதிமன்றத்தில் ஒருதலைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் இந்நிலையில் தற்போது வழக்கு நடவடிக்கையை நீடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள

21/XI/2022

இம்மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் அவிடவிட்டு பாரா 6 ல் கண்ட விபரங்கள் அனைத்தும் மனுதாரே நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்றும் மனுதாருக்கு வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே வழக்கை நடத்தாமல் தற்போது வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தெரியாதது போல தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும் மேலும் மனுதார் சமூகம் நீதிமன்றம் உள நிறைவு தக்கவகையில் எந்தவொரு காரணத்தையும் தனது அவிடவிட்டில் கூறிக்கொள்ளாததால் மனுதார் தாக்கல் செய்துள்ள மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆகையால் சமூகம் நீதிபதி அவர்கள் மேலான கிருபை செய்து மனுதார்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் மனுவை தனது செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதார்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தனது மனுவில் தான் 04.03.2022ம் தேதியன்று இவ்வழக்கின் IA No.107/2021ல் தனக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டிருப்பதாகவும் அதனை தனது தற்போதைய வழக்கறிஞரின் மூலம் தெரிந்து கொண்டதாகவும் அந்த மனுவில் enquiryக்கு தயாராக உள்ளதாகவும் தனது முந்தைய வழக்கறிஞரிடம் கேட்டும் தனக்கு சரியான தகவல் கிடைக்கப்பெறவில்லை என்றும் தான் தூத்துக்குடியில் வசித்து வருவதால் வழக்கின் நிலை தெரியவில்லை என்றும் ஒரு தலைப்பட்ச உத்தரவு திரும்ப பெறவேண்டியதாகும் என்றும் தன்னுடைய வருகையின்மை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் அது தெய்வாதீனமாய் ஏற்பட்ட ஒன்றாகும் என்றும் எனவே இந்த வழக்கை ஏற்கவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் ஒரு தலைப்பட்ச உத்தரவினை set aside செய்ய வேண்டும் என்று

21/XI/2022

மனுதாரரின் மனு அமைந்துள்ள நிலையில் எதிர் மனுதாரர் தனது எதிர் மனுவிலும் தனது எதிர்வாதத்திலும் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் இந்த மனுவானது ஆவணங்கள் படியும் சங்கதிகள் படியும் உண்மையில்லை என்றும் மனுதாரர் பொய்யான விபரங்களை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அவரது வழக்கறிஞர் சரியான தகவல் மனுதாருக்கு கிடைக்கவில்லை என்று உண்மைக்கு புறம்பாக கூறியுள்ளார் என்றும் மனுதாரர் கடந்த 25.03.2022 ம் தேதியன்று தான் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார் என்றும் மனுவில் கடந்த 04.03.2022 ம் தேதி ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டுள்ளது போல போலியான விபரங்களை கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே அசல் மனுவில் மனுதார் வாய்தா போடப்பட்டிருந்த வாய்தாக்களில் முன்னிலையாகி ஒத்திழைக்காததாலேய ஒரு தலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளார் என்றும் தற்போது வேண்டுமென்றே வழக்கு நடவடிக்கையை நீடிக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே தாக்கல் செய்துள்ள இம்மனுவானது மனுதாரர் உளநிறைவு தக்க வகையில் எந்த ஒரு காரணத்தையும் தனது அவிடவிட்டில் கூறாததாலும் இந்தமனு தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்றும் இந்த மனுவானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிர் மனு மற்றும் எதிர் வாதத்தின் மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதை பார்க்கையில் மனுதாரரால் தான் முன்னிலையாகததற்கு மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதாகதான் இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தனது மனுவில் 04.03.2022 ம் தேதி தான் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது குறித்து பார்க்கையில் எதிர்மனுவிலும் வழக்காவணங்களிலும் எதிர்மனுதாரரின் வாதத்திலும் கடந்த 25.03.2022 ம் தேதியன்று தான் மனுதாரர் 25.03.2022 ம் தேதிதான் ஒரு தலைப்பட்சமாகியிருக்கிறார் என்று காணமுடிகிறது. மனுதாரர் கூறிய 04.03.2022 ம் தேதி என்பது தட்டச்சு பிழையாக இருக்கலாம் அல்லது தகவல் முரண்பாட்டு பிழையாக இருக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்/எதிர்மனுதார்/1 ம் பிரதிவாதிக்கு வாய்ப்பளிப்பது ஏற்புடையதாக இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர்/மனுதார்/வாதிக்கு ஏற்பட்ட கால தாமதம் சிரமத்திற்கு

21/X/2022

மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி ஈடு செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/மனுதார்/வாதிக்கு செலவுத்தொகை ரூ.1000/–யை மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/மனுதார்/வாதிக்கு செலுத்த வேண்டும் என்று நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக இம்மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என தீர்மானித்து மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/மனுதார்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.1000/– செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதித்தும் தவறும் பட்சத்தில் மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 21.11.2022 இன்று அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>மனுதாரர்/எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை
<u>எதிர்மனுதாரர்/மனுதார்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.